REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் : அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: தை 29உ வெள்ளி (11—2—55) ★ ★ வெளியூர்: தை 30உ சனி (12—2—55) [இதழ் 206

கவர்னர்தான் பேசியிருக்கிறார்!

"உங்கள் சேவையால் தமிழ் மொழி வளம் பெற்றிருக்கிறது. பல்லாயிரம் ஆண்டுகளாகியும் தனது தூய்மை கெடாத மொழி தமிழ் ஒன்றேதான்; உலகிலுள்ள வேறு எம்மொழிக்கும் அப்பெருமை கிடையாது—நிச்சயமாக ஆங்கிலத்துக்கோ, இந்திக்கோ கிடையாது. அவ்வினிய தமிழ் மொழியின் மணம் மேலும் கமழ உங்கள் தமிழ்ப் புலமை உதவுகிறது."

இவ்வாறு, அண்ணாமலை பல்கலைக் கழக விசேட பட்டமளிப்பு விழாவில், சென்னை கவர்னர் பிரகாசா, வயது முதிர்ந்த தமிழ்ப் பேராசிரியர் நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களுக்கு, அவர் உட்கார்ந்துகொண்டிருந்த இடத்திற்குச் சென்றே 'கௌரவ டாக்டர்' பட்டம் வழங்குகையில் குறிப்பிட்டார்.

மக்களை ஈக்களெனச் சுட்டுத் தள்ளுவதா?

பி. சோ. கட்சி குற்றமுடையதே!

பட்டத்தின் வீழ்ச்சிக்கு லோகியா தரும் விளக்கம்

"நாட்டின் நிர்வாகமென்பது, மனிதனை மனிதனாக மதிப்பதாக இருக்கவேண்டும்; இந்தியன் ஒருவனை ஈ என நினையாமல் போலீசார் துப்பாக்கியால் சுட்டுத் தள்ளாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்" என்று டாக்டர் ராம் மனோகர் லோகியா, திரு—கோச்சி மந்திரி சபையின் வீழ்ச்சி பற்றி தனது கருத்துக்களைத் தெரிவிக்கும்போது பொதுவாக எச்சரித்தார்.

"திருவாங்கூர்—கொச்சி மந்திரி சபை குற்றம் புரிந்தது தான்; ஆனால், அக்குற்றத்திற்கு நாட்டில் பொதுவாக உள்ள பி. சோ. கட்சியும் பொறுப்பாளியாகும்; குறிப்பாக கட்சியின் குழுக்களுக்கு தலைமைப் பீடம் அறிவுரை வழங்குவதிலும் குற்றம் இருக்கிறது," என்றார்.

தான், ஆரம்பத்திலிருந்தே பட்டம் தாணுவின் மந்திரிசபையை எதிர்க்கவில்லை என்றும், 'பங்கு எடுத்துக்கொள்வதில்லை; பொறுத்துக்கொள்வது' என்ற கொள்கையின் மீதுதான் மந்திரிசபை அமைக்கப்பட்டதாகவும், ஆனால், இந்தக் கொள்கையின் வெற்றி, பதவியை விட்டு எப்போதும் வெளியேறத் தயாராக இருக்கும் நிலைமையைப் பொறுத்ததே என்றும் லோகியா குறிப்பிட்டிருக்கிறார்.

நாட்டின் அரசியல் வாழ்வு பற்றிக் குறிப்பிடுகையில் அவர் கூறியதாவது:—

"எதிர்க் கட்சியாக இருக்கும்போது சொல்லப்படும் சொற்களுக்கும், பதவியில் இருக்கும்போது காணப்படும் நடைமுறைக்கும் உள்ள வேற்றுமை போக வேண்டும்; உண்மைக்கு சிறிதளவேனும் மதிப்பளிக்க வேண்டும்; தங்களுடைய கட்சியில் உண்மைக்கு மதிப்பில்லாத குறைபாடுகளை உறுப்பினர்கள் வெளியிடத் தயாராக இருக்க வேண்டும்."

"போலீசார் எப்போது துப்பாக்கிப்பிரயோகம் செய்யலாம் என்பது பற்றிய திட்டவட்டமான முடிவு இருக்க வேண்டும்," என்று லோகியா மீண்டும் வற்புறுத்தியிருக்கிறார்.

நல்லதுதானே?

கல்கத்தா, பிப். 9—

கல்கத்தா பல்கலைக் கழகத்தவர், ஆண்களும், பெண்களும் எல்லா வயதினரும் ஒன்றாகச் சேர்ந்து கல்வி பயிலுவதை அனுமதித்தாலும்கூட மாணவ மாணவிகள் ஒன்றாகச் சேர்ந்து நாட்டியம், நாடகம் ஆடுவதையும் கலை நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவதையும் விரும்பவில்லை.

அந்தப் பல்கலைக் கழகத்துடன் இணைந்துள்ள எல்லா கல்வி நிறுவனங்களின் தலைவர்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கை ஒன்றில், இந்தப் பள்ளிகள், கல்லூரிகளில் நடைபெறும் எந்த ஒரு விழா நிகழ்ச்சியிலும், ஆண்களும் பெண்களும் சேர்ந்து பங்கு பெறுவது அனுமதிக்கப்படக் கூடாதென உத்திரவு பிறப்பித்திருப்பதாகத் தெரிகிறது.

மாணவர்கள் இது பற்றி என்ன கருதுகிறார்கள் என்பது இன்னும் தெரியாவிட்டாலும், சமீபத்தில் நடைபெற்ற சரஸ்வதி பூஜை விழாக்கள் இந்த உத்திரவினால் வெகுவாக பாதிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கைவிட்டுவிட்டார்!

பிரெஞ்சுப் பிரதமர் பதவியை மெண்டே பிரான்ஸ் விட்டுத் துறந்ததும், அந்தோனி பினே என்பவர் புது அமைச்சரவை அமைக்க அழைக்கப்பட்டிருந்தார்.

தாம் புதிய மந்திரி சபை அமைக்கும் முயற்சியைக் கைவிட்டு விட்டதாக அவர் அறிவித்திருக்கிறார்.

மீண்டும் மெண்டே பிரான்சே மந்திரி சபையை அமைக்குமாறு கோரப்படலாம் என வதந்திகள் உலவுகின்றனவாம்.

காலதாமதமாகும்

ஜாம்ஷெட்பூர், பிப். 11

மாநில புனரமைப்புக் குழு வருகிற ஜூன் மாதத்தில் தனது யதாஸ்தை சர்க்காருக்குக் கொடுக்க வேண்டுமென இந்திய சர்க்கார் விரும்பியது என்றும், ஆனால் ஜூனுக்குமேல் அவகாசம் நீடிக்கப்படலாம் என்றும், மேற்படி குழுவின் உறுப்பினருள் ஒருவரான பண்டித குன்ஸ்ரு தெரிவித்திருக்கிறார்.

கடவுள் சிலை வைக்குமிடத்தில் கள்வர் நுழையும் பாதை!

இரும்புப் பெட்டி கதவுகளுக்குப் பின்னால் பாதாள அறை தோற்றம்

பூனா வியாபாரியின் கிடங்கில் திருட்டு சொத்துக்கள்?

பூனா, பிப். 9—

திருட்டுச் சொத்துக்கள் ஏராளமாக பதுக்கிவைக்கப்பட்டிருந்த இடம் ஒன்றை பூனா போலீசார் கண்டுபிடித்துள்ளனர்.

ரவிவார் பேட்டை என்னும் பகுதியில் உள்ள கட்டிடம் ஒன்று 'இரகசிய கிடங்காக' பயன்படுத்தப்பட்டதாம். இக்கட்டிடம் ஜோத்பூர் வியாபாரிக்குச் சொந்தமானதாம்.

நகைகள், தங்கக்கட்டிகள், சைக்கிள்கள், கைக்கடியாரங்கள், வானொலிப் பெட்டிகள், இசைக் கருவிகள், விலை உயர்ந்த துணிகள் ஆகியவைகளும், ஏராளமான பாத்திரங்களும் பெரும் அளவில் இந்த இரகசியக் கிடங்கில் பதுக்கிவைக்கப்பட்டிருந்ததாம்.

இதற்கு முன்பு ஒரு முறை இந்த கிடங்கை கண்டுபிடிக்க முயன்று போலீசார் தோல்வியுற்றனர் என்று சொல்லப்படுகிறது. பதுக்கிவைக்கப்பட்டிருக்கும் பொருள்கள் திருட்டு பொருட்கள் என்றும் சொல்லப்படுகிறது.

அந்தக் கட்டிடத்திற்குச் சொந்தமான வியாபாரிக்கு லேவாதேவி லைசென்சு ஒன்றும், நகைக் கடை ஒன்றும் இருக்கிறதாம்.

கடைக்குள் நுழைந்ததும் கடவுள் சிலை ஒன்று வைக்கும் இடம் ஒன்று இருந்ததாம். அதன் பின்னால் 12 இரும்புப் படிக்கட்டுகள் காணப்பட்டதாம். அதன்வழியே சென்றபோது, ஒரு அறையில் சுவற்றில் இரும்புப் பெட்டிகள் பதிக்கப்பட்டிருந்ததைப் போலீசார் கண்டுபிடித்தனராம்.

அப்பெட்டிகளில் ஒன்றைத் திறந்தபோது அது இரகசிய கிடங்கு ஒன்றுக்குப்போகும் பாதையாக இருந்ததாம்.

பாதாளக் கிடங்கில் காணப்பட்ட சாமான்கள் திருட்டுச் சொத்துக்களாக இருக்குமென்று நம்பிய போலீசார் அனைத்தையும் மூடி 'சீல்' வைத்துள்ளனர்.

பனம்பள்ளி பதவி தேடுகிறார்?

தி.கொ.-வில் காங்கிரஸ் மந்திரிசபை அமைக்க முயற்சி

சட்டசபையைக் கலைக்க பட்டம் தாணுபிள்ளை கூறிய யோசனை நிராகரிப்பு?

திரு-கொச்சி அரசியல் நிலையில் புதிய மாறுதல்கள் அடுத்த சில நாட்களுக்குள் ஏற்படுமென்று தெரிகிறது.

நேற்று திரு-கொச்சி முதல் அமைச்சர் பட்டம் தாணுபிள்ளை தனது மந்திரிசபையின் இராஜினாமாவை இராஜப் பிரமுகரிடம் கொடுத்திருக்கிறார்; இராஜினாமாவை ஏற்றுக்கொண்டு, அடுத்த ஏற்பாடுகள் நடைபெறும் வரையில் பதவியில் நீடிக்குமாறு பட்டம் தாணுவை இராஜப்பிரமுகர் கேட்டுக்கொண்டார் என்று தெரிகிறது.

இதற்கிடையில், அடுத்த மந்திரி சபை அமைப்பது பற்றிய ஏற்பாடுகளை காங்கிரஸ் செய்து வருகிறதாம். திரு-கொச்சி சட்டசபையை கலைக்கவேண்டுமென்று பட்டம் தாணுவின் மந்திரி சபை கூறிய யோசனை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்று தெரிகிறது.

திரு-கொச்சி சட்டசபை காங்கிரஸ் கட்சியின் தலைவர் பனம்பள்ளி கோவிந்தமேனன் இன்று மாலை மூன்று மணிக்கு இராஜப் பிரமுகரை சந்திக்க இருக்கிறார்.

தன்னை வந்து சந்திக்குமாறு இராஜப்பிரமுகர் பனம்பள்ளிக்கு அழைப்பு அனுப்பியிருக்கிறாராம்.

சனிக்கிழமை அன்று திரு-கொச்சி சட்டசபை காங்கிரஸ் கட்சியினர், பிரதேச காங்கிரஸ் கட்சியினர், மாவட்டக் காங்கிரஸ் தலைவர்கள் ஆகியோர் கூடி, திரு-கொச்சி அரசியல் நிலை பற்றி விவாதிப்பார்கள் என்று தெரிகிறது.

திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரசின் ஒத்துழைப்புடன் திரு—கொச்சி காங்கிரஸ், மந்திரி சபையை அமைக்கப் பாடுபடுகிறது.

திரு—கொச்சி பி. சோ. கட்சியும், சட்டசபை பி. சோ. கட்சியும் கூடி, ஐக்கிய முன்னணி மந்திரி சபை அமைத்தால் அதை ஆதரிப்பது பற்றிய பிரச்சினைக்கு, பி. சோ. கட்சியின் தலைமைப் பீடத்தின் உதவியை நாடுவது என்று தீர்மானித்துள்ளன.

புத்தமத உத்தமர் சுடப்பட்டார்

கயா, பிப். 10—

புத்த கயாவிலுள்ள பர்மிய மடாலயத்தில் உள்ள பொங்கி உத்தமர் நேற்று மாலை 4 கொள்ளையர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தி வெளிவந்துள்ளது.

மேற்படி மடத்திலுள்ள சில சொத்துக்களைக் கொள்ளையிட 4 கொள்ளையர்கள் மடத்தை தாக்கிய போது பொங்கி உத்தமர் அவர்களை எதிர்த்ததாகவும், அப்போது கொள்ளையர் நால்வரில் ஒருவன் அவரைச் சுட்டதாகவும், கையில் பலத்த காயம் பட்ட அவர் விரைவில் மரணமடைந்தார் என்றும் கூறப்படுகிறது. மேற்படி கொள்ளையர்கள் உடனே ஓடிவிட்டார்களாம்.

குறிப்பு:— (பொங்கி உத்தமர் பிரக்கியாதி பெற்ற ஒரு பர்மிய தேசியவாதியாவார். இவர் 'பர்மா காந்தி' என்றும் அழைக்கப்படுவார். இவர், ஒரு முறை சிறையிலிருந்து விடுதலை பெற்று வெளிவரும்போது, பர்மியப் பெண்கள் தங்கள் கூந்தலை (தலை மயிர்) நடபாவாடையாக விரித்து அவற்றின் மேல் அவரை நடக்கவிட்டது நினைவிருக்கலாம்.)

ஜாகீர் முறை ஒழிப்பு: பாக். மந்திரி எதிர்ப்பு

"சட்ட விரோதமானது; பழிவாங்கும் தன்மையானது" என்று குற்றச்சாட்டு

கராச்சி, பிப். 10—

பாகிஸ்தான் அரசாங்க கல்வி மந்திரியும், பிரபல சிந்து அரசியல்வாதியுமான மீர்குலாம் அலிதால்பூர், சிந்துவில், ஜாகீர் முறை ஒழிக்கப்பட்டது, சட்ட விரோதமானதும், அரசியல் சட்டத்திற்கு முரணானதுமாகும் என்று கூறியிருக்கிறார்.

கடந்த செவ்வாயன்று, சிந்து மந்திரி சபை, ஜாகீர் முறையை நஷ்டஈடு எதுவுமின்றி ஒழிப்பதென முடிவு செய்துள்ளது.

மீர் குலாம் அலிதால்பூர், இப்போது சிந்து முதன் மந்திரியாக இருக்கிற எம். ஏ. குர்ரோவின் அரசியல் எதிரி என்று கருதப்படுபவர்.

அவர் "நிலமற்ற ஏழைகளுக்கு நல்லது செய்யவேண்டுமென்பதற்காக அல்ல—மாறாக அரசியலில் பழி வாங்கும் நோக்குடன்தான், குர்ரோ, ஜாகீர் முறையை ஒழித்திருக்கிறார்," என்று குறிப்பிட்டுள்ளார்.

சிந்து மந்திரிசபையின் முடிவை நீதி மன்றத்தில் நிறுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கூறுவது நாமல்ல!

"………துளசியை காதில் சொருகி, ஜெபமாலையைக் கையிலேந்தி, உஞ்ச விருத்தியின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் காலத்தை ஓட்ட வேண்டிய யோக்கியதை உள்ள இந்த 'சு. மி' (சுதேசமித்திரன்) கூட்டத்தினரிடம் பத்திரிகையும் பணமுமிருக்கிறது என்பதற்காக, எதை வேண்டுமானாலும் எழுதலாம்……"

—"சோஷலிஸ்டு" வார இதழ் 6—2—55

இழந்த சொத்து

இந்தியாவில் தங்கள் தங்கள் சொத்துக்களை விட்டுவிட்டு குடிபெயர்ந்த முஸ்லிம்களுக்கு நஷ்டஈடு அளிக்கும் நோக்கத்துடன், பாக். சர்க்கார் அவசரச் சட்டம் ஒன்றைப் பிரகடனம் செய்துள்ளனர். அப்பிரகடனத்தின்படி, தாங்கள் இழந்துவிட்ட சொத்துக்களின் மதிப்பை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தாக்கல் செய்யலாம் என்று குறிப்பிட்டிருக்கிறது.

வேதனையா? விசித்திரமா?

ராஜ்கோட், பிப். 10—

ராஜ்கோட்டில் ஆரம்ப ஆசிரியர் உத்தியோகங்களுக்காக, நாவிதர்கள், சலவையாளர்கள், சிற்றுண்டிச் சாலை உரிமையாளர்கள் ஆகியோரும் மனுச் செய்துகொண்டுள்ளனராம்!

இவர்கள் எல்லாருமே படித்தவர்கள்தானாம். ஆனாலும் வேலை கிடைக்காததினாலேயே இவ்வித வேலைகளை அவர்கள் மேற்கொள்ள வேண்டிய நிலை அடைந்தார்களாம்.

அண்மையில் ராஜ்கோட் சர்க்கார் 2,000 ஆரம்ப ஆசிரியர்கள் தேவையென்று விளம்பரம் செய்திருந்ததின் பேரிலேயே இவர்களெல்லோரும் மனுச் செய்துகொண்டனராம்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்..அண்ணதுரை
சென்னை 11—2—1955 வெள்ளி

வாழ்க, பல்கலைக் கழகம்!

“ஆண்களையும் பெண்களையும் அரசாங்க ஊழியர்களாக உருவாக்க மட்டுமே கல்லூரிகளும், பல்கலைக் கழகங்களும் இருக்கவில்லை. அரசாங்க ஊழியம் செய்வதற்கே பல்கலைக் கழகப் பட்டதாரிகள் பயிற்றுவிக்கப்படுகிருர்கள் எனக் கொள்ளுவதும், கல்லூரியை விட்டு வெளியேறின மறுகணமே வேலை கிடைக்கவில்லையானல், அவர்களுடைய வாழ்க்கை வாழத் தகாத ஒன்று எனக் கொள்ளுவதும் குறுகிய நோக்காகும்.”

“நல்லவற்றை ஏற்றுக்கொள்ள ஒருவருக்குள்ள ஆற்றலை வளர்க்கவும், பொருட்களை நுணுகி ஆராய்ந்து தெளிந்து முடிவு காணவும் ஒருவருக்குக் கல்வி உதவ வேண்டும். பிற இடங்களிலிருந்து எழும் எண்ணங்களும் கருத்துக்களும் அறிவில் புகும் வண்ணம் தங்கள் அறிவுக் கண்ணைத் திறந்து வைத்திருக்கும் வகையில், முன்னதாகவே இளைஞர்களைப் பயிற்றுவித்துவைத்திருப்பதுதான் பல்கலைக் கழகப் படிப்பின் நோக்கமாகும். புதிய கருத்துக்களுக்கு அவர்கள் இணங்கி, அவைகளை ஆராய வேண்டும்.”

“இன்றைய தேவை தலைமையேயாகும். பிறரைப் பின்தொடர்ந்து செல்லாது, தங்களுக்குத் தாங்களே சிந்தித்து, பெறப்படும் சொந்த முடிவுகளின் வழி திறம்படச் செயலாற்றும் தலைவர்களே இன்று தேவைப்படுகிருர்கள். இத்தகு பண்பு பெற்ற ஆண்களையும் பெண்களையும் உருவாக்கினல்தான், வெற்றி பெற்ற ஒன்ருக நம்முடைய கல்வி முறையைக் கருத முடியும்.”

பல்கலைக் கழகங்களின் அடிப்படை நோக்கத்தையும், கல்லூரிப் பட்டப் படிப்பின் உட்பொருள் குறித்தும் மிகமிகத் தெளிவாகக் கூறியிருக்கிருர், உலக மன்றங்களில் மங்காப் புகழ் பெற்று விளங்கும் ஆற்காடு டாக்டர் இராமசாமி அவர்கள்.

அரசாங்க ஊழியர்களை நிரப்புவது ஒன்றையே குறியாகக் கொண்டு செயல்பட்டு வருவது அல்ல பல்கலைக் கழகப் படிப்பு; அவ்வாறு கருதுவது குறுகிய நோக்காகும் எனவும் டாக்டர் தெள்ளத்தெளிய அறிவித்துள்ளார். இம்மறுக்க முடியா உண்மையை, சாதாரண குடிமக்கள் உணர்ந்தில்லாததில் வியப்பொன்றுமில்லை. ஆனல், கல்லூரிகளில் பயின்று பட்டங்களைப் பெற்றிருப்பதோடு மட்டுமின்றி, பற்பல விதமான அரசியல் கொள்கைகளைக்கொண்டு பொது வாழ்வில் ஈடுபட்டிருக்கிறவர்கள்கூட, டாக்டர் ஆணித்தரமாகக் கூறியுள்ள உண்மையை உணர்ந்துகொள்ளாது இருப்பதுதான் வேதனைதரும் விசித்திரமாக இருக்கிறது. இத்துறையில் காங்கிரஸ் ஆளவந்தார்கள் நோக்கும் போக்கும் நம் போன்ருேர்களுக்கு அச்சத்தை மூட்டுவதாகவே இருக்கிறது. எங்கு பட்டப் படிப்பு, இந்த ஆளவந்தார்கள் கை சிக்கி, மந்தி கை மாலையாகிவிடுகிறதோ என அஞ்சவேண்டி இருக்கிறது.

அரசாங்க ஊழியர்களைத் தயாரித்து வெளியேற்றுவதை மட்டுமே குறியாகக் கொண்டியங்கி வருவதல்ல பல்கலைக் கழகம் எனக் கருத்தறிவித்த டாக்டர் இராமசாமி, இதுவரை அப்படிப்பு பெற்றுள்ளது வெற்றியா தோல்வியா என்ற உண்மையைக் கண்டறிவதற்கான ஒரு துலாக்கோலையும் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய நாட்டின் தேவை தலைமை எனக்கூறும் அவர், கண்ணையும், கருத்தையும் இறுக மூடிக்கொண்டு பிறர் ஏவல்வழி ஆடிக்கிடக்கும் ‘மந்தைமதி’த் ‘தலைமை’யை அவர் ஒப்புக்கொள்ளாது, சுயமாகச் சிந்தித்து, கொண்ட முடிவில் பற்றுதல் கொண்டு செயலாற்ற முனையும் சீரிய தலைவர்களே தேவைப்படுகிருர்கள் என உருக்கமாகப் பேசி இருக்கிருர்.

டாக்டர் குறிப்பிடும் சிறப்பியல்புகள் பெற்றுள்ள தலைவர்களை அன்றும் இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள பல்கலைக் கழகங்கள் உற்பத்தி செய்யத்தான் செய்தன. இன்றும் அப்பணியை, முன்னிலும் திறம்பட பல்கலைக் கழகங்கள் செய்து கொண்டுதான் வருகின்றன.

இந்தியத் துணைக் கண்டத்திற்கு உலக அரசியலில் ஒரு புதிய இடத்தைத் தேடிக் கொடுத்த உத்தமர் காந்தியார், பல்கலைக் கழகத்தின் படைப்பேயாகும். பதி இழந்த மங்கையர்கள் உடன்கட்டை ஏறி, கருகி மடியும் கொடுமையை ஒழித்த இராஜாராம் மோகன்ராயும் ஒரு பல்கலைக் கழகம் தந்த பெரு நிதியேயாகும்.

காங்கிரஸ் தலைவர்களில் பெரும்பான்மையினர், பலப்பல பல்கலைக் கழகங்களின் தோன்றல்கள்தான். அதே காலத்தில் அரசியல் மிதவாதம் பேசிய தலைவர்கள் அனைவருமே, பல்கலைக் கழகத்தில் தலைமைத் தகுதி பெற்றவர்கள் தான்.

மேற்கூறிய தலைவர்களில் சிலர், புகழ்ந்துள்ளனர்—போற்றியுள்ளனர்—பாராட்டியுள்ளனர்—ஆரிய ஆசிரமக் கல்வியின் அரும்பணியினை—ஆற்றிய வினையினை! இன்றும் தலைவரெனப்படும் பட்டம் பெற்ற சிலர், ஆசிரமக் கல்வியின் அருமை பெருமைகளைக் குறித்துப் பிதற்றி வருகின்றதை நம்மில் பலர் அறிந்தே இருக்கிருர்கள்! அன்று அதைச் செய்தவர்களுக்கும், இன்று அதையே செய்துகொண்டு வருபவர்களுக்கும் காரணமாக இருந்துவருவது ஒன்றே ஒன்றுதான். அதாவது, ஆரிய கலாசாரம் மற்ற கலாசாரங்களிலும் சிறந்தது என அவர்கள் கொண்டிருந்த—கொண்டுள்ள அறியாமைதான், அக்காரணமாகும். அக்கருத்தினர் சிலருடைய பிறவிக் குணமும், அக்கருத்துர்க்கு வித்தாக இருந்துவருகிறது என்பதையும் நாம் கூருமல் இருப்பதற்கில்லை.

மேற்கூறிய வகையைச் சேர்ந்த தலைவர்களின் காலம் அழிந்தேவிட்டது. இன்று வேறு வகை தலைவர்கள் நாட்டின் தேவையாகிருர்கள்.

இப்பொழுது தேவைப்படும் தலைவர்கள் எந்தவித இலட்சணங்கள் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பதற்கு டாக்டர் இராமசாமி கூறியுள்ள கருத்து அனைவராலும் வரவேற்கத்தக்கதாகும்.

பிறர் வழி இயந்திரம்போல் இயங்காது, தங்களுக்குத் தாங்களே சிந்தித்து, முடிவெடுத்து, அதை வழிகாட்டியாகக் கொண்டு நாட்டு மக்களை நடத்திச் செல்லும் இலட்சணம் படைத்தத் தலைவர் வேண்டுமென்கிருர் டாக்டர். இத்தகையவர்களை உண்டாக்கும் ஆற்றல் எந்தக் கல்வி முறைக்கு இருக்கிறதோ, அந்தக் கல்வி முறையே வெற்றி பெற்றதாகக் கொள்ளத்தக்கது என டாக்டர் ஐயத்திற்கிடமின்றி கூறியுள்ளார்.

இந்த வெற்றி, தோல்வி அறிவிக்கும் அளவைக்கொண்டு பார்க்குமிடத்து, வெள்ளி விழா கொண்டாடிய அண்ணமலை பல்கலைக் கழகம், தனது குறுகிய ஆயுட்காலத்திற்குள்ளாகவே, குறிப்பிடத் தகுந்த வெற்றி பெற்றிருக்கிறது எனக் கூறுவது எவ்வகையிலும் மிகையுடையதாகாது. சென்னை பல்கலைக் கழகமும் அப்பெரும் சேவையில் பின்தங்கிவிடவில்லை என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

ஆரிய அனுசாரத்தில் மயங்கிக் கிடந்த திராவிடப் பெருங்குடி மக்களை, பகுத்தறிவுப் பாதை வழி இட்டுச் செல்ல பணிபுரிந்துவரும் தோழர்கள் நெடுஞ்செழியன், அன்பழகன், மதியழகன், இளம்வழுதி போன்ற மற்றவர்கள் அண்ணமலை பல்கலைக் கழகம் தந்த நவரத்தினங்கள்தானே! இன்னும் பெயர் குறிப்பிட முடியாத நன்மாணிக்கங்கள் உள்ளனர், இலைமறைகாயாக—பகுத்தறிவு தமிழ் அறிவுப் பணி புரிந்த வண்ணம். அம்மாணிக்கங்களும் அண்ணமலை இட்ட பெரும் பிச்சையேயன்ருே!

டாக்டர் இராமசாமி குறிப்பிட்டுள்ளது போல் நாட்டின் இன்றைய தேவைப்படி தலைவர்களை உருவாக்கித் தந்த—தந்துவரும் அண்ணமலைப் பல்கலைக் கழகம் என்றென்றும் வளம்பெற்று வாழ்ந்து, பல்லாயிரக்கணக்கான திராவிடப் பெருந் தலைவர்களை, பொதுச் சேவையாளர்களை உருவாக்கித்தர வேண்டும் என்பதே நமது பேரவா. வாழ்க! வாழ்க!! அண்ணமலை பல்கலைக் கழகம் என நெஞ்சார வாழ்த்துகிருேம்.

வலிமை குறையாத ஜாதி ஏற்பாடு!

கூட்டுறவு இயக்கத்திலும் அதன் ஆதிக்கம்!

புதுடெல்லி, பிப். 7—

உருக்கு இரும்பு போன்று உள்ள இந்தியாவின் பழம் பெரும் ‘ஜாதி ஏற்பாடு’ இன்னும் வலிமை குன்ருமல் இருந்து வருகிறது. கூட்டுறவு கிராமக் கடன் தரும் அமைப்பில், அந்த ஜாதி ஏற்பாடு, மற்ற எல்லாவற்றையும்விட அதிக அளவில் ஊடுருவிக்கொண்டு இருக்கிறது.”

—இவ்வுண்மையை, ரிசர்வ் பாங்கியினல், கூட்டுறவு முறையில் கிராமக் கடன் தரும் சங்கங்கள் குறித்து ஆராய்ந்தறிய நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

மேலும் அவ்வறிக்கை குறிப்பிடுவதாவது :—

“கூட்டுறவு முறையினல் உருவாகக் கூடிய பற்றுதலை நெருக்கமான ஜாதியத் தொடர்பு கத்தரித்து விடுகிறது. உயர் ஜாதிக்காரர்களாக உள்ள பார்ப்பனர், கம்மவர், ரெட்டியார் ஆகியவர்கள், தங்கள் ஆதிக்கத்திலுள்ள கூட்டுறவு சங்கங்களில், அதன் ஊழியர்களாகக் கூட, மற்ற ஜாதியினரை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர்.”

“பணம் படைத்த எவருக்கும் நிலம் வாங்கும் உரிமை சட்டப்படி இருந்தபோதிலும், தாழ்ந்த ஜாதிக்காரர் ஒருவர் போதிய பணம் படைத்தவராக இருந்தாலும், நிலம் வாங்குவது என்பது மிக மிகக் கஷ்டமாக இருக்கிறது.”

“நிலக் குடி உரிமை சீர்திருத்தம் செயலாற்ற முடியாமலிருப்பதற்கான காரணம், இப்பொழுதும் நிலச் சொந்தக்காரர்கள் செல்வாக்குப் பெற்றவர்களாக இருந்து வருவதேயாகும். பஞ்சாப் மாநிலத்தில் ஐந்து ஆண்டுகள் தொடர்ந்தார்போல் ஒரு உழவன் குறிப்பிட்ட நிலத்தில் சாகுபடி செய்து வந்தால், அதற்குப் பிறகு அவனுக்கு அந் நிலத்தில் நிரந்தரக் குடிவார உரிமை ஏற்பட்டுவிடுகிறது என சட்டம் கூறுகிறது. ஆனல் எந்த ஒரு உழவனும் குறிப்பிட்ட ஒரு நிலத்தில் இரண்டு மூன்று ஆண்டுகள் தொடர்ந்தாற்போல் பயிர் செய்வது கிடையாது என, கிராம அரசாங்க நில ஏடுகள் அறிவிக்கின்றன. கிராம முன்சீப்பும், கணக்குப் பிள்ளையும், பெரும்நிலச் சொந்தக்காரர்களாகவே இருந்து வருவதால், அரசாங்க நில ஏடுகளை அவர்கள் விருப்பத்திற்குத் திருத்திக் கொள்ளுகின்றனர்.”

“கிராமத்தில் உள்ள உயர்ஜாதி தலைமைக்கு உறுதுணையாக இயங்கும் ‘புதிய செல்வாக்கு’ ஒன்றும் இருந்துவருகிறது. சுற்றுப் பிரயாணம் செய்யும் உயர் அதிகாரிகளை தங்கள் விருந்தினராக வைத்து உபசரிப்பதினுலும் கிராமத் தலைமையின் செல்வாக்கு மேலும் கூடுதலாகிறது. கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகப் பொறுப்பும், உணவு பங்கீட்டுக் கடையின் உரிமையும், ஒரே நபரிடம் சிக்குவதால், அவருடைய தயவுக்கு கிராம மக்கள் காத்திருக்க வேண்டியவர்களாகின்றனர். இத்துடன் பெரும் நிலக்கிழார், ஒரு மாவட்டக் கழகத்தின் உறுப்பினராகவும் இருந்துவிட்டால், அதிகாரத்தை தவறுதலாகச் செலுத்துவதற்கான வாய்ப்பும் விரிவடைந்து விடுகிறது.”

“இன்றும் கிராமத் தலைமையானது நிலப்பிரபுத்துவ அமைப்பின் அடிப்படையிலும், கொடும் கொடுமையிலும் இருந்து வருகிறது. இவ்வுண்மையை உயர்தர அதிகாரிகள், தங்கள் கீழ்த்தர அதிகாரிகளிடம் கொள்ளும் உறவு முறைக்கு ஒரு பொருட்டாகக் கொள்ளத் தவறிவிடுவதும் கிராமத் தலைமையின் தவருன அதிகார பிரயோகத்திற்கு ஆக்கந்தருவதாக முடிகிறது.”

சீனவுக்கு புதிய ரஷ்யப் பிரதமர் உறுதிமொழி

“பார்மோசா பிரச்சினையில் மக்கள் சீன தற்போது கடைபிடிக்கும் கொள்கைக்கு ரஷ்யா தனது முழு ஆதரவையும் தரும்” என்று ரஷ்யப் புதிய பிரதமர் மார்ஷல் நிக்கோலாய் புல்கானின், சோவியத் பாராளுமன்றத்தில் இரண்டு நாட்களாக நடைபெற்ற வெளிநாட்டுப் பிரச்சினை விவாதத்தை முடிக்கும்போது கூறினர்.

கனரகத் தொழில்களுக்கு ரஷ்யா இப்போது அதிக முக்கியத்துவம் அளிப்பது பற்றி அவர் எடுத்துக் கூறினர்.

விவசாயத்திற்கு டிராக்டர்கள் போன்றவை தேவைப்படுகிறது என்றும், அவற்றை கனரகத் தொழில்கள் மூலமே உற்பத்தி செய்யமுடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

“சீன மக்கள் தங்களின் உண்மையான நண்பனை சோவியத் யூனியனிடமிருந்து உதவியை எதிர்பார்க்கலாம்,” என்று புல்கானின் குறிப்பிட்டார்.

‘சபதம்’ செய்தனர்!

ஆமதாபாத், பிப். 8—

சபர்மதியிலுள்ள நாடோடி மலை ஜாதியைச் சேர்ந்த சுமார் 2,000 வகாரி பெண்கள், தாங்கள் இனிமேல் புகை பிடிப்பதில்லை என்றும், துடுக்குத்தனமானபேச்சு வார்த்தைகளை நிறுத்திவிடுவதென்றும் சபதம் செய்துள்ளார்களாம்.

அவ்வகுப்பைச் சேர்ந்த சில பெரியோர்கள், அப்பெண்களிடம் ஆபாசமான பழக்க வழக்கங்களைத் துறந்துவிட்டு, நாகரீகமிக்க நாரிமணிகளாக விளங்கும்படி புத்திமதி கூறியிருந்தார்களாம்.

இந்தப் புத்திமதி, அப்பெண்களிடையே ஏற்பட்ட 2 மணி நேர ‘காரசாரமான’ விவாதத்திற்குப் பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்டதாம்.

தஞ்சையில் கல்லூரி!

தஞ்சை மாவட்டத்திலுள்ள பூண்டி கிராமத்தைச் சேர்ந்த பிரபல மிராசுதாரர்களான எ. வீரய்யா, அவரது சகோதரர் கிருஷ்ணசாமி ஆகிய இருவரும் தஞ்சையில் கல்லூரி ஒன்றை அமைக்க 50 ஏக்கர் நஞ்சை நிலம் அளிக்க முன்வந்துள்ளனர் எனத் தெரியவருகிறது. சென்னை கல்வி இலாகா டைரக்டர் நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள், மேற்படி கல்லூரி கட்டிடத்திற்கான நிலத்தைத் தேர்ந்தெடுக்க, 50 ஏக்கர்கள் கொண்ட தனித் தனியான 3 பிரிவு நிலங்களைப் பார்வையிட்டிருக்கிருர்.

கல்லூரியைநடத்துவதற்கு மேற்கொண்டு 350 ஏக்கர் நிலமளிக்கவும், மாணவர் விடுதிகளுக்கான வசதிக்கு சில கட்டிடங்களும் கொடுக்க அவர்களிருவரும் முன்வந்துள்ளனராம்.

அநீதி ஆரம்பம்

தென் ஆப்பிரிக்காவில், ஜோகனஸ்பர்க் நகரின் மேற்குப் பகுதியில் வாழ்ந்த ஆப்பிரிக்கக் குடும்பங்களை நகருக்கு வெளியே உருவாக்கப்பட்ட ‘மெடோலந்து’ எனும் இடத்தில் குடிமாற்ற உத்தேசித்திருந்ததை, குறிப்பிட்ட நாளுக்கு 3 நாட்களுக்கு முன்னரே மேற்கொள்ள சர்க்கார் தீர்மானித்து, அங்குள்ள சுமார் 150 ஆப்பிரிக்கக் குடும்பங்களை 9-ந் தேதியன்று காலை ‘எவ்வித அசம்பாவிதமுமில்லாமல்’ கடத்திச் சென்றனர் என்று போலீசார் தெரிவித்துள்ளனர்என்று தெரியவருகிறது.

கட்சியிலிருந்து விலக்கப்பட்டார்

புதுடில்லி, பிப். 9—

திரு—கொச்சி சட்டசபையில் பிரஜா-சோஷலிஸ்டு கட்சியின் உறுப்பினராக இருந்த டி. எஸ். இராமசாமியை பி. சோ கட்சியிலிருந்து ‘சஸ்பெண்ட்’ செய்திருப்பதாக அக்கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் குறிப்பிட்டார்.

இப்போது டி. எஸ். இராமசாமி சட்டசபையில் சுயேச்சை உறுப்பினராக இருக்கிருர். பட்டம் தாணு பிள்ளையின் மந்திரி சபையின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டுவந்தது இவர் தான் என்பது அனைவரும் அறிந்ததே.

அண்ணுமலை பல்கலைக் கழக வெள்ளி விழா

பலருக்குக் கெளரவப் பட்டங்கள்

அண்ணுமலைநகர், பிப். 9—

அண்ணுமலை பல்கலைக் கழகத்தின் வெள்ளி விழா இன்று அண்ணுமலை நகரில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு மைசூர் இராஜப் பிரமுகர் தலைமை தாங்கினர். டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்கள் வெள்ளி விழா பேருரை நிகழ்த்தியபின், நாதசுர இசையுடன் தமிழர் மரபுக்கிணங்க விழா ஆரம்பமாயிற்று.

அண்ணுமலை பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் சர். சி. பி. இராமசாமி அய்யர், விழாவிற்கு வந்திருந்த பெரியோர்களை வரவேற்றுச் சொற்பொழிவாற்றுகையில், அண்ணுமலை பல்கலைக் கழகத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்காக வகுக்கப்பட்டுள்ள திட்டங்களை எடுத்துரைத்தார்.

மேற்படி விழாவையொட்டி அனுப்பப்பட்டிருந்த வாழ்த்துச் செய்திகள் யாவும், படித்துக் காண்பிக்கப்பட்டன.

பின்னர், விழாவிற்குத் தலைமை வகித்த மைசூர் இராஜப் பிரமுகர் தமது தலைமையுரையாற்றி முடித்து, ராஜா சர். அண்ணுமலை அவர்களின் உருவச்சிலையொன்றினைத் திறந்து வைத்தார். பின்னர் சென்னை மாநில கவர்னர் பிரகாசா அவர்கள் சொற்பொழிவாற்றினர்.

இவ்விழாவையொட்டி, யோகி சுத்தானந்த பாரதியார் இயற்றிய கவிதை ஒன்றை இசையரசு எம். எம் தண்டபாணி தேசிகர் அவர்கள் பாடினர்.

சென்னை முதலமைச்சர் காமராசர் அவர்கள், ராஜா சர். அண்ணுமலை அவர்களின் துணைவியார் ராணி சீதை ஆச்சியின் பெயரால் கட்டப்பட்டுள்ள மாணவர் விடுதி ஒன்றைத் திறந்து வைத்தார்.

டாக்டர் லட்சுமணசாமி அவர்கள் வெள்ளி விழாப் பேருரை நிகழ்த்திய பின்னர், பேராசிரியர் ஏ. இராமநாதன் அவர்கள் துணை வேந்தர் சர். சி. பி.-க்கு வெள்ளி விழா மலரை அளித்தார்.

பிற்பகலில், கவர்னர் பிரகாசா. டாக்டர் சர். சி. பி. இராமசாமி அய்யரின் வாசகசாலைக்கு அஸ்திவாரக்கல் நாட்டினர்.

மாலை, சீனிவாச சாஸ்திரி மண்டபத்தில் விசேட பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

பல்கலைக் கழகப் பிரமுகர்களடங்கிய ஊர்வலம் செனட் கட்டிடத்திலிருந்து பட்டமளிப்பு விழா மண்டபத்தை வந்தடைந்தது. கவர்னர் பிரகாசா பட்டமளிப்பு விழாவிற்குத் தலைமை தாங்கி, டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் (உதவி ஜனதிபதி), மைசூர் இராஜப் பிரமுகர், ராஜா. சர். முத்தையா, டாக்டர் சர். சி. பி. இராமசாமி அய்யர், சர். சாமுவேல்ரங்கனுதன், டாக்டர் ஏ. இலட்சுமணசாமி, எஸ். சோமசுந்தரம் (பல்கலைக் கழக முன்னுள் துணைவேந்தர்—தமிழ்ப் பேராசிரியர்) ஆகியோருக்கு 'கெளரவ இலக்கிய டாக்டர்' பட்டங்களை வழங்கினர். டாக்டர் இராதாகிருஷ்ணன் மட்டும் பட்டத்தைப் பெற நேரில் வர இயலவில்லை.

மைசூர் இராஜப் பிரமுகர் திறந்துவைத்த 9 அடி உயரமுள்ள ராஜா சர். அண்ணுமலை அவர்களின் உருவச் சிலை, 14 படிக்கட்டுகள் கொண்ட மேடை ஒன்றின் மேல் கம்பீரமாகத் தோற்றமளித்தது. இச்சிலையை, பிரபல சிற்பியான எம். ஆர். நாகப்பா நிர்மாணித்தார்.

பல்கலைக் கழக துணைவேந்தர்கள்

மாநாட்டில் சந்திப்பர்

பல்கலைக் கழகங்கள் சம்பந்தமாக செகண்டரி கல்விக் குழு செய்துள்ள சிபாரிசுகளைப் பரிசீலனை செய்வதற்காக சென்னை, ஆந்திரா, திரு—கொச்சி, அண்ணுமலை, திருப்பதி, மைசூர், ஐதராபாத் ஆகிய மாநில பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களை வரும் சென்னையில் கூடி மாநாடு ஒன்றை நடத்துவார்களென்றும், இம்மாநாடு அனேகமாக மார்ச்சு திங்கள் இடைநாட்களில் நடைபெறலாம் என்றும் சென்னை பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. லட்சுமணசாமி அவர்கள், கடப்பையிலுள்ள அரசாங்கக்கலைக் கல்லூரியின் புதிய கட்டிடம் ஒன்றைத் திறந்துவைத்துச் சொற்பொழிவாற்றுகையில் தெரிவித்திருக்கிறர்.

மேலும் அவர் தமது உரையில் குறிப்பிட்டார் :—

"கல்வி கற்பதின் நோக்கம் தனிப்பட்ட முறையில் இருக்காமல், தேசத்தின் நன்மைக்கும், சமுதாயத்தின் நன்மைக்கும் பயன் தருவதாக இருக்கவேண்டும். கல்வி ஒவ்வொருவரையும் நாட்டிற்குத் தேவையான ஒரு செல்வமாக மாற்றவேண்டுமே தவிர, படித்து வேலையின்றி வாடும் கூட்டத்தை அதிகரிக்கச் செய்து, அது நாட்டுக்குப் பெரிய கடனைச் செய்துவிடக் கூடாது.

கல்வி விஷயத்தில் ஒவ்வொருவரும் கண்டிப்பாக 14 வயது வரை கற்கவேண்டும். வாழ்க்கையில் பொறுப்புக்களை ஏற்கக் கூடிய வகையில் செகண்டரி கல்வி இருக்கவேண்டும். கல்லூரிப் படிப்புக்கு, தகுந்த திறமையும் வசதியும் உள்ளவர்களே அனுப்பப்படவேண்டும்.

"செகண்டரி கல்விக் குழுவின் சிபாரிசுகளை அமுல் நடத்துவது, மத்திய, மாநில சர்க்கார்களின் கடமையும் பொறுப்புமாகும்."

ஆண் குழந்தை பெற வழி?

சென்னை, பிப். 8—

குடும்பக் கட்டுப்பாடு சம்மந்தமாக, சென்னை சட்டசபைக் கூட்டத்தில், ஒரு கேள்வி எழும்பியது.

பெரும்பாலும், குடும்பங்களில் பெண் குழந்தைகளே பிறக்கின்றன என்றும், அப்படி பெண்கள் அதிகமாகி விடுவதால்தான் நாட்டில் மக்கள் தொகை அதிகமாகி விட்டதென்றும், பெண்குழந்தைகள் பெற்ற பிறகு ஆண் குழந்தைகள் பெற முயற்சிகள் செய்தாலும் முடியவில்லை என்றும், எனவே, முதல் முறையிலேயே ஆண் குழந்தைகள் பிறக்க சர்க்கார் ஏதாவது வழி வகைகளைக் கண்டுபிடித்துள்ளனரா என்று, சட்டசபை உறுப்பினர் முத்து கேள்வி ஒன்றை எழுப்பினர். பலத்த சிரிப்பொலிகளுக்கிடையே, இதை திட்டமாக நிர்ணயிப்பதற்கான முறை இன்னும் தெரியவில்லை என்று அமைச்சர் பதிலிறுத்தார்.

அரிசன மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம்

சென்னை சர்க்கார் அரிசன க்ஷேமநலஇலாகா, கடந்த 1952-ல், அரிசன மாணவர்களுக்கு உபகாரச் சம்பளமாக ரூ. 7,27,564-ம், 1953-ல் ரூ. 7,22,513-ம் செலவழித்துள்ளதென்று சட்டசபையில் தோழர் ஏ. இரத்தினம் எம்.எல்.ஏ. அவர்கள் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் பரமேசுவரன் குறிப்பிட்டார்.

அரிசன சேவா சங்கம் 43 மாணவர் விடுதிகளை நடத்தி வருவதாகவும், அவற்றில் 40 விடுதிகளை சர்க்கார் க்ஷேம நல இலாகா அங்கீகரித்துள்ளதென்றும், அவற்றிற்கு சர்க்கார், 1948—52 ஆகிய 5 ஆண்டுகளுக்கும் மொத்தம் ரூ. 10,19,220 மானியமளித்துள்ளதென்றும் குறிப்பிட்டிருக்கிறர்.

அரசியல் நிர்ணய சபையைக் கலைத்தது சட்ட விரோதமானது!

பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல் செய்கைக்கு சிந்து நீதிமன்றம் தீர்ப்பு

கராச்சி, பிப். 9—

கடந்த 1954-ம் ஆண்டு அக்டோபர் 24-ந் தேதியன்று, பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையைக் கலைத்துவிட்டதாக பாக். கவர்னர்-ஜெனரல் பிறப்பித்த உத்தரவை ஆட்சேபித்து அரசியல் நிர்ணய சபைத் தலைவர் தமீசுத்தீன் கான் தாக்கல் செய்துள்ள மனு ஒன்றின் மீது, சிந்து தலைமை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்த 'ரிட்' மனுவை, ஐந்து நீதிபதிகள் கொண்ட குழு விசாரணை செய்தது.

கவர்னர்-ஜெனரல் விடுத்த உத்தரவு, பாக். சட்ட விரோதமான ஒன்று என்றும், அது செல்லுபடியாகாது என்றும் அந்த ஐந்து நீதிபதிகளும் ஒருமனதாகத் தீர்ப்பளித்துவிட்டனர்.

அது தவிர, பாகிஸ்தான் அமைச்சர் அவையில், மேஜர் ஜெனரல் இஸ்கந்தர் மீர்சா, ஜெனரல் அயூப்கான், டாக்டர் கான் சாகிப், இஸ்பகானி மீர்குலாம் அலி ஆகியோர் இடம் பெற்றதும் சட்ட விரோதமானதே என்றும் மேற்படி நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது.

இந்த தீர்ப்பின் மீது சர்க்கார், 'பெடரல் கோர்ட்டு'க்கு அப்பீல் செய்துகொள்ள அவகாசம் தருவதற்காக வேண்டி, இத்தீர்ப்பை அமுல் நடத்துவது 14 நாட்களுக்கு நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று மேற்படி கோர்ட்டு தெரிவித்தது.

மேலும், பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபைத் தலைவராக தமீசுத்தீன்கான் பணிவு செய்வதைத் தடுக்கக் கூடாதென்றும், புதிதாக அமைச்சரவையில் இடம் பெற்ற மேற்கண்ட அமைச்சர்கள் உடனே தடை செய்யப்பட வேண்டுமென்றும் உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளது.

கோர்ட்டின் இத்தீர்ப்பை அமுல் நடத்துவது நிறுத்திவைக்கப்பட வேண்டுமென்று சர்க்கார் சார்பில் அட்வகேட்-ஜெனரல் கோரினர். இக்கோரிக்கையை தமீசுத்தீன் கானின் வக்கீல் ஆட்சேபித்தும், அவரது ஆட்சேபணையை கோர்ட் ஏற்றுக்கொள்ளவில்லை.

அதிக 'தியாகம்' செய்ய வேண்டுமாம்!

வரி உயர்வு, கட்டாயக் கடன் வசூல் ஆகியவைகள் இல்லாமலேயே ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்ற முடிகிறதென்றும், ஆனல் 'மிகப் பிரம்மாண்டமான' இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்ற மக்கள் 'அதிக தியாகம்' செய்யவேண்டியதிருக்கும் என்றும் மத்திய சர்க்கார் தொழில், வர்த்தக அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் தெரிவித்திருப்பதாகப் பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.

இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற தனி மனித சுதந்திரத்தை 'ஓரளவு' விட்டுக் கொடுக்கவேண்டியிருக்கும் என்றும், மக்கள் 'பிரம்மாண்டமான தியாகங்கள்' செய்யவேண்டுமென்றும் அவர் மேலும் கூறினராம்.

திருவத்திபுரத்தில் பொங்கல் விழா

★

28, 29, 30—1—55 ஆகிய 3 நாட்களிலும், திருவத்திபுரம் தி. மு. கழகச் சார்பில், தோ.மு.ஆரைஸ் மில் திடலில் பொங்கல் விழா நடைபெற்றது.

28—1—55 மாலை 6 மணிக்கு தோழர் சி. வி. சுப்பராயன் தலைமையில் நடைபெற்ற முதல் நாள் விழாக் கூட்டத்தில், தோழர் க. அன்பழகன் அவர்கள் சொற்பொழிவாற்றினர்.

29—1—55மாலை 7-30மணிக்கு தோழர் சி. வி. சுப்பராயன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொங்கல்விழா இரண்டாவது நாள் நிகழ்ச்சியில், தலைவர் முன்னுரைக்குப் பிறகு தோழர்கள் அ. பொன்னம்பலனர், காஞ்சி - கல்யாணசுந்தரம், பொதுச் செயலாளர் அண்ணுதுரை ஆகியோர் பொங்கல் விழாவின் சிறப்பு பற்றியும், திராவிட சமூக — அரசியல்— பொருளாதார விடுதலை குறித்தும், பகுத்தறிவோடு, மக்கள் வாழ்க்கையில் எல்லா நலன்களும் பெற்று இன்புற்று வாழ திராவிட நாடு திராவிட மக்கட்கு உரிய தனியரசு பெற்றல்தான் முடியும் என்பதை விளக்கியும் பேசினர்கள்.

30—1—55 மாலை 6 மணிக்கு தோழர் பி. கே. இராமசாமி தலைமையில் தோழர்கள் முகவை - ஆர். எஸ். பாண்டியன், என். வி. நடராசன், இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

வேலூர்-வேலப்பாடி :

30—1—55 மாலை தி. மு. கழகச் சார்பில், தோழர் வே. சு. பாண்டியன் தலைமையில் நடைபெற்ற பொங்கல் விழாப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் அ. கூத்தரசு, ஆ. மணி எழிலன், வே. ஆ. இளஞ்செழியன் ஆகியோர் பேசியபின், தோழர் க. அன்பழகன் அவர்கள் பொங்கல் விழாதான் திராவிடரின் தன்மான விழா என்றும், இடைக்காலத்தில் கம்பராமாயணமும் பாரதமும் திராவிட நாட்டு மக்களை பழமைக்கு அழைத்துப் போய்விட்டதென்றும், இனி திராவிட மக்கள் விழிப்பாக இருந்து புராணப் பண்டிகைகளை ஒதுக்கி, பகுத்தறிவுக்கேற்ற பண்டிகைகளையே கொண்டாட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

மதுரை :

30—1—55-ல், மஜீத் படிப்பக சார்பில், தோழர் பி. எஸ். இரத்தினம் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர்கள் ச. எமராசன், மு. வசனப்பித்தன், ஒளவை து. நடராசன், கே. எஸ். சந்தானம், எஸ். முத்து ஆகியோர் பொங்கல் விழா குறித்துச் சொற்பொழிவாற்றினர். சிறுவர்களுக்கு இனிப்பும் வழங்கப்பட்டது.

* * *

14—1—55 காலை 8½ மணிக்கு; மதுரை இராமாயணச்சாவடித் தெருவிலுள்ள இ. ராம. இருளப்பக் கோனர் நினைவுப் படிப்பகச் சார்பில் திரு. எஸ். சோமசுந்தரபாரதியார் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில், தோழர்கள் நா. இராமையா, பொன்னையா ஆகியோர் பேசினர். தலைவர் அவர்கள், பொங்கல் விழாவின் சிறப்பியல்புகள் குறித்துச் சொற்பொழிவாற்றினர்.

குன்னத்தூர் :

30—1—55ல், இவ்வூர் தேர் முட்டித் திடலில், தோழர் கே. என். நடராசன் தலைமையில் நடைபெற்ற விழாப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கே. கே. அய்யாவு, சிற்றுளி அ. சுப்பிரமணியம், க. அறிவழகன் ஆகியோர் பொங்கல் விழா குறித்து சொற்பொழிவாற்றினர்.

இராசபாளையம் :

14—1—55ல், தோப்புப்பட்டி பாவடித் தெருவில் சாலியர் வாலிபர் சங்கச் சார்பில், தோழர் ஜி. சிதம்பரம் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. ஆயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்களுக்குப் பொங்கல் வழங்கப்பட்டது.

புத்துமாரியம்மன் கோவில்

13—1—55ல் இவ்வூர் தி. மு. கழகச் சார்பில் விழா கொண்டாடப்பட்டது. சிறுருக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்கப்பட்டது. தோழர் ஏ. பெருமாள் கழகக் கொடி ஏற்றிய பிறகு, தோழர்கள் சி. ராமசாமி, குப்புசாமி, இருட்டிணன் மற்றும் பலர் சொற்பொழிவாற்றினர்.

வகுரம்பட்டி :

14—1—55ல், தி. மு. கழகச் சார்பில், தோழர் பழனியாண்டி தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர் சின்னையா 'பொங்கல் விழா' என்பது பற்றி சொற்பொழிவாற்றினர். விழாவையொட்டி, கழகத் தோழர்களால் 'இன்ப திராவிடம்' எனும் நாடகம் நடைபெற்றது.

திருநள்ளாறு :

27—1—55 மாலை 4 மணிக்கு, இவ்வூர் தி. மு. கழகச் சார்பில் திராவிடர் திருநாள் விழா சிறப்புக் கூட்டம், தோழர் க. ராமசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் அறிவழகன், அறிவுடை நம்பி ஆகியோர் விழா சிறப்பு குறித்துச் சொற்பொழிவாற்றினர். பின்னர், பாடல், சொற்பொழிவு போட்டிகள் நடைபெற்றன. அறிவியற் போட்டிகளில் (கட்டுரை, சித்திரம், பாடல், பேச்சு) வெற்றி பெற்றவர்களுக்கு தோழர் அறிவுடைநம்பி பரிசுகள் வழங்கினர்.

விளாப்பாக்கம்

31—1—55 அன்று, இவ்வூர் தி. மு. கழகச் சார்பில் திராவிடர் திருநாளும், கழக 3-ம் ஆண்டு விழாவும் நடைபெற்றது. காலை 8 மணி யளவில் ஊர்வலமும், பகல் 12 மணிக்கு தோழர் அ. மா. குப்புசாமி அவர்களால் கொடியும் ஏற்றப்பட்டது. பின்னர் ஏழைகளுக்குக் கஞ்சி ஊற்றப்பட்டது. மாலை 7 மணிக்கு, தோழர் தி. கு. நாகநாதன் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில், தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் வி. எஸ். கோவிந்தராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

அத்திப்பாளையம் :

16—1—55 இரவு 8 மணிக்கு, தி. மு. கழகப் பண்ணிமனையில், தோழர் கொ. வேங்கடசாமி தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில், பொங்கல் விழா கொண்டாடுவதின் அவசியத்தைப் பற்றி தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். அனைவருக்கும் சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டது.

கள்ளக்குறிச்சி :

இளைஞர் தி. மு. கழகச் சார்பில் 20—1—55ல், பொங்கல் விழாப் பொதுக்கூட்டம், தோழர் மு. பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சுரதா, பொ. சொக்கலிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

மாலெங்காவ்— உதவி பிரதமராகிறர்

சோவியத் ரஷ்யாவின் பிரதம மந்திரியாக இருந்து இராஜினமாச் செய்த மாலெங்காவ், உதவி பிரதமராகவும், மின்சார இலாகா அமைச்சராகவும் நியமனம் பெற்றர்.

பாதுகாப்பு இலாகா அமைச்சராகப் பணியாற்றிய அலெக்ஸாண்ட்ரோவிச் புல்கானின் பிரதமராக நியமிக்கப்பட்டிருக்கிறர்.

பிரதமர் பதவியைத் தாம் ஏற்றுக் கொண்டதின் காரணமாக, தற்காப்பு இலாகாவின் பொறுப்பிலிருந்து தம்மை விடுவிக்கும்படி, புல்கானின், மக்கள் சபையைக் கோரிக்கொண்டுள்ளார். அவரது கோரிக்கையும், புதிய தற்காப்பு அமைச்சரின் நியமனமும் சபையில் அங்கீகரிக்கப்பட்டது.

மாலெங்காவின் உதவிப் பிரதமர் நியமனத்தையும், மின்சார இலாகா அமைச்சர் நியமனத்தையும் சபை ஏகமனதுடன் அங்கீகரித்துவிட்டது.

சென்னை சட்டசபையில்...

இரக்சியக் கூட்டம்

சென்னை, பிப். 10—

சென்னை சட்டசபை இன்று முதல் முறையாக இரகசியமாகக் கூடி, அரைமணி நேரம் விவாதித்தது. வெள்ளையர் இந்த நாட்டை விட்டு வெளியேறிய பின்னர் சென்னை சட்டசபை இரகசியமாகக் கூடுவது இந்தியாவிலேயே இதுதான் முதல் தடவையாகும். 1938-ம் ஆண்டில் இதுபோன்று ஒருமுறை நடைபெற்றதாம்.

தென் கன்னட மாவட்டத்தைச் சேர்ந்த சட்டசபை உறுப்பினர் 144 தடை உத்தரவை மீறியமைக்காக போலீசார் கைது செய்தனராம்; அவர் இப்போது ஜாமீனில் இருக்கிறார்; இப்பிரச்சினை இப்போது நீதிமன்றத்தில் இருக்கிறது.

இப்பிரச்சினை பற்றி விவாதிக்க உறுப்பினர் கே. பி. கோபாலன் கொண்டுவந்த தீர்மானத்தின் போது சட்டசபை இரகசியமாக நடைபெற்றது. இப்பிரச்சினை நீதிமன்றத்தில் இருப்பதால் இரகசியமாக விவாதிக்க வேண்டுமென்று நிதிஅமைச்சர் கூறினார்.

"மக்களுக்கு நாம் என்ன பேசினோம்என்பதுதெரியாமல்போனால் இப்பிரச்சினையின்முக்கியத்துவமே போய்விடும்,"என்று எம். கல்யாணசுந்தரம் கூறினார்.

இரகசியமாகக் கூடுவது பற்றி வாக்கு எடுக்கப்பட்டது; 88 பேர் ஆதரித்தும், 23 பேர் எதிர்த்தும் வாக்களித்தார்கள். பி. சோ. கட்சியினரும், திராவிட பார்லிமெண்டரி கட்சியினரும் நடுநிலைமை வகித்தனர்.

பின்னர் பத்திரிகை நிருபர்கள், பார்வையாளர்கள் வெளியேற்றப்பட்டு கூட்டம் இரகசியமாக நடைபெற்றது.

★

ஆரம்பக் கல்வி

சட்டசபையில் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையில், ஆரம்பக் கல்வி ஆய்வுக் குழுவினர், மாவட்டங்களில் உள்ள பல்வேறு ஆசிரியர் மன்றங்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளுமாறு கூறப்பட்டிருக்கின்றனர் என்று நிதி அமைச்சர் கூறினார்.

"எந்த அடிப்படையில் ஆய்வுக் குழுவினர், ஆசிரியர்கள் மன்ற உறுப்பினர்களை ஒத்துழைப்புக்காக சேர்த்துக் கொள்வது?" என்று திரு. சுயம்பிரகாசம் கேட்டபோது, "அது பற்றி சர்க்கார் உத்தரவு எதும் பிறப்பிக்கவில்லை" என்று அமைச்சர் பதில் அளித்தார்.

"சர்க்காரின் ஆரம்பக் கல்விக் கொள்கைபற்றி ஆராய வேண்டுமென்பதுதானே குழுவினரின் வேலை?" என்று நாராயண குருப் கேட்டபோது, சர்க்கார் உயர்நிலைக் கல்வி பற்றிய கொள்கையை இன்னும் முடிவு செய்யவில்லை என்றும், ஆதாரக் கல்வித் திட்டத்தையன்றி வேறு கல்வித் திட்டங்களை சர்க்கார் இன்னும் தீர்மானிக்கவில்லை என்றும் நிதி அமைச்சர் கூறினார்.

"சர்க்காரின் கல்வி நோக்கம் ஆதாரக்கல்வி என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறதே, அப்படியிருக்கையில் அமைச்சர் கூறுவதன் பொருள் புரியவில்லையே?" என்று நாராயண குருப் கேட்டபோது, தற்போதுள்ள பள்ளிகளை ஆதாரக்கல்விப் பள்ளிகளாக மாற்ற நீண்டகாலம் பிடிக்குமென்றும், அதுவரையில் நடைமுறையில் இருக்கவேண்டிய கொள்கை பற்றியே ஆலோசிக்கப்படுகிறது என்றும் நிதி அமைச்சர் பதில் அளித்தார்.

★

நெய்வேலி தொழிலாளர்

சென்னை சட்டசபையில் இன்று எம். கல்யாணசுந்தரம் கொண்டுவந்த நெய்வேலியில் ஏற்பட்ட ஆட்குறைப்பு பற்றிய தீர்மானத்தின்மீது ஒரு மணி நேரம் விவாதம் நடைபெற்றது.

சர்க்கார், தொழிலாளர்களை வெளியே அனுப்பியதற்குக் காரணம், பரீட்சார்த்தத் திட்டம் முடிவடைந்து விட்டது என்று கூறுகிறார்கள் என்றும், அதேநேரத்தில் தொழிலாளர்கள் தேவை என்று வேலை தேடும் நிலையத்தில் நெய்வேலி திட்ட அதிகாரிகள் கோரியுள்ளனர் என்றும், எம். கல்யாணசுந்தரம் எடுத்துக் கூறி, தமிழ் நாட்டு மக்கள் நெய்வேலி திட்டத்தை நம்பிக்கையுடன் நோக்குகின்றனர் என்றும், ஆகவே, சர்க்கார், தொழில் கொள்கையில் பாரபட்சம் காட்டாமல் நடந்து கொள்ள வேண்டுமென்றும் கூறினார்.

திரு. எம். பழனியாண்டி பேசுகையில், வேலையிலிருந்து நீக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு சேர வேண்டிய உதவித் தொகைகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

"முன்பு நெய்வேலித் திட்டத்தில் அதிகாரியாக இருந்தவரை மீண்டும் அமர்த்தினால் தொல்லை எதும் வராது," என்று கே. ஆர் நல்லசிவம் தெரிவித்தார்.

அமைச்சர் பக்தவத்சலம் பதில் அளிக்கையில், சர்க்கார் தொழிலாளருக்குப் பாதகமாக எதும் செய்துவிடவில்லை என்றும், பரீட்சார்த்தத் திட்டம் முடிந்த பின்னரும், தேவையில்லாத போது தொழிலாளர்களை வைத்துக் கொண்டு மக்களின் பணத்தை நாசம் செய்வது கூடாது என்றும் குறிப்பிட்டார்.

★

பாகிஸ்தான் அகதிகள்:

சென்னை மாநிலத்தில் மேற்கு வங்க அகதிகள் 1,208 பேர் இருக்கின்றனர் என்றும், சர்க்கார் இவர்களுக்கென்று ரூ. 22,996 பண உதவியும், கல்லூரி உதவித் தொகையாக ரூ. 23,701-ம், கடனாக ரூ. 1,05,938-ம் செலவிட்டிருக்கிறது என்று நிதிஅமைச்சர் சுப்பிரமணியம், கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையில் கூறினார்.

★

'காதலர் பாதை!'

சென்னை மெரினா கடற்கரையிலுள்ள 'காதலர்கள் பாதை' பற்றி சென்னை சட்ட சபையில் ரசமான கேள்விகளும் பதிலும் எழுந்தன.

இந்த 'காதலர் பாதை' கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்னரே அமைக்கப்பட்டுவிட்டதென்றும், அதை அமைக்க எவ்வளவு செலவானது என்பது தமக்குத் தெரியாதென்றும் தற்போது அந்த இடம், சென்னை சர்க்கார் மராமத்து இலாகாவின் கீழ் இருந்து வருவதாகவும், எனவே நகரசபைக்கு மானியமளிக்கும் பிரச்சினை எழும்பவில்லை என்றும் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் மராமத்து இலாகா அமைச்சர் கூறினார்.

"இந்தப் பாதை வழியாக திருமணமாகாத காதலர்கள் மட்டும் தான் போகலாமா, அல்லது திருமணமான காதலர்களும் போகலாமா?" என்று கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு அமைச்சர், "உறுப்பினர் எப்படி வேண்டுமானாலும் தமது விருப்பப்படி நினைத்துக்கொள்ளலாம்," என்றார்.

"இது விஷயத்தில் அமைச்சருக்கு சொந்த அனுபவம் ஏதாவது உண்டா?" என்று ஏ. இராமசாமி கேட்டார்.

"நான் இது பற்றிய அனுபவங்களைப் பெறுவதற்கு முன்னமேயே உறுப்பினர் அங்கு சென்று அனுபவம் பெற்றுவரும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்" என்று அமைச்சர் பதில் தந்தார்.

"இப்பாதை 'காதலர் பாதை' என்று பெயரிடப்பட்ட காரணம் என்ன?" என்று கேட்கப்பட்டபோது, அமைச்சர், "ஒருவேளை ஐரோப்பிய அதிகாரி யாராவது ஒருவர் 'காதலில் திளைத்து,' மெய்மறந்து இருக்கும்போது இப்பெயர் வைத்திருக்கலாம்" என்று பதில் கூறினார்.

"இதுவரை 40 வயதுக்கு மேற்பட்ட உறுப்பினர்களே 'காதல்' பற்றிய கேள்விகள் கேட்டனர். 40 வயதுக்குக் குறைவான நானும் ஒரு கேள்வி கேட்கிறேன்" என்று கூறிக் கொண்டு, தோழர் பழனியாண்டி "காதல் பாதை என்றால் என்ன அர்த்தம்?" என்று கேட்டார்.

அதற்கு அமைச்சர் தம்மால் சொல்ல முடியாது என்றார்.

★

மிராசுதார்—விவசாயிகள் தகராறு

தஞ்சாவூர் மாவட்டத்தில் நடைபெற்ற மிராசுதார்—விவசாயிகள் தகராறு பற்றி கே. அனந்தன் நம்பியாரிடமிருந்து சென்ற ஆண்டு ஜூன் 20-ந் தேதியன்று முதலமைச்சருக்கு ஒரு விண்ணப்பம் வந்ததென்றும், அதில் குறிப்பிட்டிருந்த புகார்களை சர்க்கார் பரிசீலனை செய்ததில், மேற்படி தகராறுகள் சம்பந்தமாக நடவடிக்கைகள் எதுவும் எடுக்கத் தேவையில்லை என்ற முடிவுக்கு சர்க்கார் வந்தது என்றும், ரெவினியூ அமைச்சர், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினார். மேலும் பொது நலனை உத்தேசித்து, மேற்படி விசாரணையின் முடிவை சபை முன்பாக சமர்ப்பிப்பதற்கில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

சைக்கிள் ரிக்ஷா!

சென்னையிலுள்ள சைக்கிள் ரிக்ஷா வண்டிகளில் ஒரு நேரத்தில் ஒரே ஆளைத்தான் ஏற்றிச் செல்லவேண்டுமென்றும், இரண்டு பேரை ஏற்றிச் செல்லக்கூடாதென்றும் சென்னை போலீஸ் கமிஷனர் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்யக் கோரி ரிக்ஷா சொந்தக்காரர்களிடமிருந்து சர்க்காருக்கு மனு ஒன்று வந்துள்ளதென்றும், சென்ற ஆண்டு செப்டம்பர் திங்கள் 30-ந் தேதி வரை மாநிலத்தில் 1,324 சைக்கிள் ரிக்ஷாக்கள் ரெஜிஸ்தர் செய்யப்பட்டன என்றும், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் போக்குவரத்து அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர், சைக்கிள் சொந்தக்காரர்கள், ரிக்ஷாக்காரர்களுக்கு அவற்றை வாடகைக்கு விடுவது சம்மந்தமாக வாடகை விகிதம் எதையும் போலீஸ் கமிஷனர் நிர்ணயிக்கவில்லை என்றும், 1954-ம் ஆண்டு செப்டம்பர் 30-ந் தேதி வரை மாநிலத்தில் 1,257 சைக்கிள் ரிக்ஷாக்காரர்கள் பிராசிக்கியூஷன் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றும் பதிலிறுத்தார்.

மேலும் அவர், சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு வாடகைக் கட்டண விகிதம் எதையும் சர்க்கார் நிர்ணயிக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

★

தமிழில் பதில்— உறுப்பினர் குறுக்கீடு

சென்னை சட்டசபையில் இன்று உறுப்பினர் ஒருவர் தமிழில் கேள்வி கேட்டபோது அமைச்சர் சுப்பிரமணியம் தமிழிலேயே பதிலளித்தார். இதை ஆட்சேபித்து மலையாள உறுப்பினர் நாராயணன் நம்பியார், அமைச்சர் தமிழில் பதிலளித்தது தமக்குப் புரியவில்லை என்றும், முக்கியமான கேள்விகளுக்குத் தங்களுக்குத் தெரியாத ஒரு மொழியில் அமைச்சர் பதிலளித்தால், தாங்கள் சபையிலிருப்பதில் எவ்வித பிரயோசனமுமே இல்லை என்றும் குறிப்பிட்டார்

அதற்குப் பதிலளிக்கையில் அமைச்சர் சுப்பிரமணியம், "முன்னொரு சமயத்தில், சபையிலுள்ள மலையாள உறுப்பினர்கள் தங்கள் மொழியிலேயே பேசுவது என்று கங்கணம் கட்டிக்கொண்டு மலையாள மொழியிலேயே பேசினார்கள்; அதன் பேரிலேயே அமைச்சர்களும் ஆங்கிலத்தில் மட்டும் தான் பதில் சொல்லுவதும் பேசுவதும் என்று தீர்மானித்தனர். இப்போது அந்த நிலைமை மாறிவிட்டது; பிரதேச மொழியில் கேள்வி கேட்டால் பிரதேச மொழியிலேயே பதில் சொல்லலாம்; அதில் தவறொன்றுமில்லை" என்றார்.

உடனே தோழர் எம். கல்யாணசுந்தரம், அமைச்சர் தமிழில் பதில் கூறியது தங்களுக்குப் புரியாததால் அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கொடுக்கும்படியாகத் தான் நம்பியார் கேட்டதாகக் கூறினார்.

அதற்கு அமைச்சர் பதிலளிக்கையில், "ஆங்கிலத்தில் பேசும் போதும், பதில் அளிக்கும்போதும் ஆட்சேபணைகள் எதும் கிளப்பாதவர்கள், இப்போது நான் தமிழில் பதிலளிக்கும்போது மட்டும் என் ஆட்சேபணைகள் கிளப்புகின்றனர் என்று எனக்குப் புரியவில்லை," என்றார்.

கோவை வட்டாரத் தோழர்கட்டு

"பொதுக் குழு நன்கொடை ரசீது பெற்றுக்கொண்டவர்கள் 13—2—55 மாலை 4 மணிக்கு தியாகராயர் படிப்பகத்தில் நடக்க இருக்கும் பொதுக் குழு ஆலோசனைக் கூட்டத்தில், வசூலித்த தொகையைச் செலுத்த வேண்டுகிறேன்."

* * *

"13-2-55 மாலை 4 மணிக்கு, கோவை தியாகராயர் படிப்பகத்தில் நடக்க இருக்கும் பொதுக் குழு ஆலோசனைக் கூட்டத்திற்கு, கோவை சுற்று வட்டாரக் கிளைக் கழகங்களின் முக்கியஸ்தர்களும், கழகத்தைச் சார்ந்த படிப்பகங்களின் முக்கியஸ்தர்களும் பொதுக் குழு சிறப்புற நடக்க தங்களின் ஆலோசனைகளைக் கூற இதனையே அழைப்பாகக் கொண்டு வரவேண்டுகிறேன்," என்று, கோவை நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் அ. பழனிசாமி அறிவிக்கிறார்.

மதுரை மாவட்ட தி. மு. கழக 2-வது மாநாட்டு வரவேற்புக் குழு உறுப்பினர் கூட்டம்

13—2—55 காலை 10 மணிக்கு, மதுரை நகர் தி. மு. கழக அலுவலகத்தில் (4, கட்ராபாளையம்) நடைபெறும். வரவேற்புக் குழு உறுப்பினர்கள் அனைவரும் வருகைதர கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பொருள்: மாநாட்டு வரவு-செலவு

கழகக் கூட்டங்கள்

★

மதுரை

மாகாளிப்பட்டி நெடுஞ்செழியன் திடலில்

13—2—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: கோ. அழகிரி

பேசுவோர்:

ஏ. வி. பி. ஆசைத்தம்பி
எஸ். முத்து
கே. எஸ். சந்தானம்

★

ஆரணி

கடைத்தெரு பிள்ளையார் கோயிலுக்கு அருகில்

13—2—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: கனகராசன்

பேசுவோர்:

எஸ். எஸ். தென்னரசு
ஏ. கே. வில்வம்
உமா
பா. சு. மணி

★

அம்மனூர்

தி. மு. கழக துவக்க விழா

கோ. காசிநாதக் கோனார் மளிகை கடைக்கு அருகில்

தலைவர்: வி. நடராசன்

பேசுவோர்:

ந. தருமலிங்கம்
வ. மோகன்
டி. எஸ். கல்யாணசுந்தரம்
முத்துகிருஷ்ணன்

ஏழை மாணவர்களுக்கு கல்வி சாதனங்கள்!

இலவசமாக நகரசபை வழங்கும்

சென்னை நகரசபையினரால் நடத்தப்பட்டுவரும் ஆரம்பப்பள்ளிகளில் படிக்கும் எல்லா சமூகத்தையும் சேர்ந்த ஏழை மாணவர்களுக்குப் புத்தகங்களும், எழுது பலகைகளும் இலவசமாக வினியோகம் செய்ய வேண்டுமென்ற நகரசபையின் யோசனையில் சர்க்காருக்கு எவ்வித ஆட்சேபனையும் கிடையாது என் [illegible] இதற்காகும் செலவை, நகரசபை, தனது பொது நிதியிலிருந்துதான் ஏற்றுக் கொள்ள வேண்டுமே தவிர ஆரம்பக் கல்வி நிதியிலிருந்து எடுக்கக் கூடாதென்று சர்க்கார் நிபந்தனை விதித்துள்ளதென்றும் கூறப்படுகிறது.

நடை முதலாண்டில், ஏழைச் சிறுவர்களுக்கு புத்தகம், பலகை வினியோகத்திற்கு ரூ. 8000 ஒதுக்கப்பட்டு, அதனால் சுமார் 4000 சிறார்கள் அனுகூலமடைந்தனர் என்று சொல்லப்படுகிறது.

அடுத்த ஆண்டிற்கான (1955—56) பட்ஜெட்டில் இதற்காக ரூ. 10,000 ஒதுக்கப்பட்டுள்ளதாம்

இதுதவிர, ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த சிறார்களுக்கு (ஆண்—பெண்களுக்கு) இலவசமாக ஆடைகள் வினியோகிக்கவும், அவர்களுக்கு தலைக்கு எண்ணெய், சோப்பு முதலியவைகளும் தந்து, ஜூனியர் செஞ்சிலுவைப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் அவர்கள் சுத்தமாயிருக்கப் பார்த்துக்கொள்ளப்படுவதற்கான திட்டமும் சேர்த்து, நகரசபைப் பள்ளிகளில் பயிலும் பிள்ளைகள் விஷயமாக இருந்துவரும் 'தாழ்வான மனோபாவ'த்தை நீக்க உதவி புரியவும் நகரசபை அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனராம்.

பசுவதையைத் தடை செய்ய முடிவு

பசுவதையைத் தடை செய்ய உத்திரப் பிரதேச சர்க்கார் முடிவு செய்துவிட்டதாக, உ. பி. சட்டசபைக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசிய கவர்னர் முன்ஷி கூறினார்.

சென்னை 37-வது வட்ட தி.மு.க. செயற் குழு உறுப்பினர்கட்கு

13—2—55 மாலை 3 மணிக்கு, கழகப் பணி மனையில், சென்னை 37-வது வட்ட தி.மு.கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது 3 மாத வரவு-செலவு கணக்கு, மற்றும் கழக ஆக்கவேலை குறித்து பேசப்படும்.

சொற் பயிற்சிக் கூட்டம்

12—2—55 மாலை 6½ மணிக்கு, சென்னை 1-வது வட்ட தி. மு. கழகக் கட்டிடத்தில், தோழர் ர. வளவன் தலைமையில் 'பொருளாதாரம்' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

வட சென்னை குறள் நெறிக் கழகம்

12—2—55 மாலை 6 மணிக்கு, சென்னை, இராயபுரம், 59, மன்னார்சாமி கோயில் தெருவில், மு. போ. வீரன் தலைமையில் 'நாட்டுப் பிரிவினையும்-நாமும்' என்பது பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

13—2—55 காலை 10 மணிக்கு, தோழர் கி. தியாகராசன் குறள் வகுப்பு நடத்துவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.